**Source:** *Tamil Murasu, p2*
**Date:** 3 July 2021

# ஆய்வு கூறுகிறது: சிங்கப்பூர்வாசிகளில் பாதிப்பேருக்கு வேலை பற்றி கவலை

சிங்கப்பூர்வாசிகளில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் வேலை பாதுகாப்பு, வேலை வாய்ப்புகள், பிள்ளைகளின் எதிர்காலத்தில் அக்கறையுடன் இருக்கிறார்கள் என்பது கொள்கை ஆய்வுக் கழகம் நடத்திய ஆய்வு ஒன்றின் மூலம் தெரியவருகிறது.

10 பேரில் ஏழு பேருக்கும் மேற்பட்டவர்கள் தங்களை வேலை பார்க்கின்ற, நடுத்தர வருமானக்காரர்களில் கீழ்நிலையில் இருப்போராகக் கூறிக்கொள்கிறார்கள்.

எண்பது சமூகங்களில் காலவோட்டத்தில் மக்கள் நம்பிக்கைகளையும் அவற்றின் தாக்கங்களையும் கண்காணிக்கும் உலகளாவிய ஆய்வுத் திட்டமான ‘உலக நன்னெறி ஆய்வு’ என்ற ஒரு திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டு உள்ள மூன்று பகுதி ஆய்வு முடிவுகளில் நேற்று கடைசிப் பகுதி வெளியிடப்பட்டது.

சிங்கப்பூரில் 21 மற்றும் அதற்கும் அதிக வயதுள்ள 2,012 சிங்கப்பூரர்களையும் நிரந்தரவாசிகளையும் 2019 நவம்பர் முதல் சென்ற ஆண்டு மார்ச் வரை ஆய்வாளர்கள் பேட்டி கண்டனர்.

10 பேரில் மூன்று பேர் வேலை போய்விடும் என்றும் புதிய வேலை கிடைக்காமல் போகக்கூடும் என்றும் தாங்கள் கவலைப்படுவதாகத் தெரிவித்தனர்.

பொதுவாக இளையர்கள் அதிக அச்சத்தை வெளிப்படுத்தினர். அதிக வயதுள்ளவர்களும் இளம் வயது ஊழியர்களால் தங்களுக்கு போட்டி உருவாகிறது என்று கவலை அடைகிறார்கள்.

பிள்ளைகளுக்கு நல்ல கல்வியைக் கொடுக்க முடியவில்லை என்று தாங்கள் கவலைப்படுவதாக 10 பேரில் ஏறத்தாழ ஆறு பேர் கூறினர். அறவே கவலைப்படாதவர்களின் விகிதம் 2012ல் 26.5 % ஆக இருந்தது. அது 2020ல் 16.9% ஆகக் குறைந்துள்ளது.

## இனவாதம் பற்றி கருத்து

சிங்கப்பூரில் பெரும்பாலானவர்கள் தாங்கள் வசிக்கும் பகுதியில் இனவாதச் சம்பவங்கள் அடிக்கடி நிகழவில்லை என்று கருதுகிறார்கள். என்றாலும் இப்படி கருதுவோரின் விகிதம் காலவோட்டத்தில் குறைந்து வந்துள்ளது.

சிங்கப்பூரில் பல இன வாழ்க்கைக்குப் பொதுவான ஆதரவு இருக்கிறது. அது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகவும் உள்ளது.

இருந்தாலும் வெவ்வேறான சமய, நாட்டு, மக்களை நம்புவது என்று வரும்போது சிங்கப்பூர்வாசிகள் அப்படியும் இப்படியுமாக இருக்கிறார்கள் என்று கொள்கை ஆய்வுக் கழக ஆய்வு குறிப்பிடுகிறது.

வாழும் இடத்தில் இனவாதச் சம்பவங்கள் எந்த அளவுக்கு இடம் பெறுகின்றன என்று கேட்டபோது, அத்தகைய சம்பவங்கள் அடிக்கடி அல்லது ஓரளவுக்கு நிகழ்வதாக 5.7% தெரிவித்தனர். அடிக்கடி அப்படி நிகழ்வதில்லை என்று 28.7 விழுக்காட்டினர் கூறினர். அறவே நிகழவில்லை என்று 65.7 விழுக்காட்டினர் தெரிவித்தனர்.

இதற்கு முன் இந்த ஆய்வு 2012ல் நடத்தப்பட்டது. அந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இப்போது இனவாதச் சம்பவங்கள் அதிகம் நிகழ்வதாக ஆய்வில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்து உள்ளார்கள் என்று ஆய்வு குறிப்பிட்டு உள்ளது.

ஆய்வில் கலந்துகொண்ட சீனர்களில் 4.8 விழுக்காட்டினர் இனவாதச் சம்பவங்கள் அளவு மிகக் குறைவு என்றனர். அதேவேளையில், இந்தியர்களில் 13.8 விழுக்காட்டினர் அந்தச் சம்பவங்கள் அதிகம் என்றனர்.

சீனர்கள் இங்கு பெரும்பான்மை இனத்தவராக இருப்பதால் இத்தகைய சம்பவங்களுக்குப் பொதுவாக அவர்கள் இலக்காவதில்லை என்பது சாத்தியமானது என ஆய்வு குறிப்பிட்டு உள்ளது.

சிங்கப்பூரில் கிறிஸ்துவர்கள், முஸ்லிம்கள், இந்துக்கள் ஆகியோர் இதர சமய மக்களை அதிகம் நம்புவோராக இருக்கும் வாய்ப்பு அதிகம் என்றும் ஆய்வு குறிப்பிடுகிறது.

## அரசியல் ஈடுபாடு

சிங்கப்பூரர்களில் பெரும்பாலானவர்கள் அரசியலில் அக்கறை காட்டாதவர்களாக இருக்கிறார்கள். 10 பேரில் ஏறத்தாழ நான்கு பேர் நண்பர்களுடன் அரசியல் பற்றி விவாதிப்பதே கிடையாது.

பாதிக்கும் மேற்பட்டவர்கள் எப்போதாவதுதான் அத்தகைய உரையாடல்களில் ஈடுபடுகிறார்கள்.

தீவிர அரசியல் செயல்பாடும் இங்கு அவ்வளவு பிரபலமானதாக இல்லை என்பதும் ஆய்வு மூலம் தெரியவந்துள்ளது.

இருந்தாலும் இளம் வயதில் உள்ள தனிப்பட்டவர்களும் உயர் சமூகப் பொருளியல் அந்தஸ்து உடையவர்களும் அத்தகைய செயல்களில் ஈடுபட்டு இருக்கும் வாய்ப்புகள் அதிகம் என்பதும் அல்லது எதிர்காலத்தில் அப்படி தாங்கள் செயல்படப்போவதாக கோடிகாட்டி இருக்கிறார்கள் என்பதும் கொள்கை ஆய்வுக் கழகம் நடத்திய ஆய்வு மூலம் தெரியவந்துள்ளது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.